கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அதிகார சபையின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.		
(i)	ரூபா 1,647,054 நிகழத்தக்க பொறுப்பு ஒதுக்கீடுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இரு தடவை சீராக்கப்பட்டிருந்தது.	இந்த தவறு ஏற்படாத வகையில் 2025 ஆம் ஆண்டு முதல் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(ii)	அதிகார சபையின் மானியமாக கிடைக்கப்பெற்ற வருமானமாக கணக்குவைக்கப்பட்ட ரூபா 1,400,000 பெறுமதியான மோட்டார் வாகனம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது குறைக்கப்படாதிருந்தமை.	2025 ஆம் ஆண்டு முதல் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(iii)	அதிகார சபையால் மீளாய்வாண்டின் போது காசாக கிடைத்த ரூபா 85,970,456 முதலீடு காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாமை.	தவறை சரிசெய்து 2025 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(iv)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 89,710,739 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 564,621,668 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த தவறு ஏற்படாத வகையில் 2025 ஆம் ஆண்டு முதல் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.	காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் சரியாக சீராக்கப் படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 54 இன் பிரகாரம் ஒரே வகுப்பிற்குரிய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்து இலாப நட்டம் ஈடுசெய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீட்டில் ஏற்பட்ட நட்டம் ரூபா 659,672 மீள் மதிப்பீட்டில் இருந்து ஏற்பட்ட இலாபத்தில் சீராக்கப்படாமல் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்த தவறு நாட்குறிப்பு இலக்கம் மூலம் 2025 ஆம் ஆண்டில் சரிசெய்யப் பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக் கப்படல் வேண்டும்.

(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் கவனத்திற் கொள்ளக் கூடிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் அதிகார சபையின் வருமானம் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக் கூற்றுக் குறிப்புக்களின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பொன்று வெளிப்படுத் தப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2023 ஆம் ஆண்டிற்காக சேமிக்கப்பட்ட விமுறைக ளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,195,295 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுதியால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் அடிப்படையில் நலன்களை செலுத்துவதாயின் எதிர்வரும் ஆண்டின் போது மேற்கொள்ளப் படுகின்றமையால் அதன் பிரகாரம் சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் அடிப்படையில் அடுத்துவரும் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட் டுள்ளது. 2025 இன் திருத்தப்பட்ட பாதீட்டைத் தயாரிக்கும் போது இந்த செலவினங்கள் உரிய ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்ம்.
(ஆ)	மீளாய்வாண்டில் நிகழத்தக்க பொறுப்புக்கள் கணிப்பீடு செய்யும் போது சேவையை விட்டுச் சென்ற ஊழியருக்காக ரூபா 785,783 நிலுவைச் சம்பளம் மற்றும் படிகள் நிகழத்தக்க பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் நிகழத்தக்க பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிகழத்தக்க பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அதிகார சபையின் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டு மொத்தமாக ரூபா	நீர்கொழும்பு வைத்தியசாலை யிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைப் பணம் தொடர்பாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரர் குழுவொன்று	பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

	10,661,760 கடன்பட்டோர் மீதியில் ரூபா 9,450,486 தொகை 05 வருடங் களை விஞ்சிய கடன்பட்டோர் மீதியாக இருந்ததுடன் அதில் அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு உரித்தற்ற பணிகளான நீர்கொழும்பு மற்றும் கம்பஹா வைத்தியசா லைகளில் பம்பிக்கூடத்தை பராமரிப்ப தற்காக அறவிட வேண்டிய முறையே ரூபா 5,940,769 மற்றும் ரூபா 421,634 உள்ளடங்கி இருந்தது.	நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழு அறிக்கையின் படி மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சமரசத்திற்காக கிடைக்க வேண்டிய தொகை புத்தகங்களில் காண்பிக் கப்படுகின்ற பெறுமதி புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு அறிக்கைக் கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜல்தர அரசாங்கத்தின் வீடமைப்பு திட்டத்தில் குடியிருப்ப வர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை தொடர்பாக முகாமைத்துவ சேவைகளில் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(ஆ)	அதிகார சபையின் மூன்று உத்தியோகத்தர்கள் சேவையை விட்டுச் சென்றமையினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 685,766 ஆன பதவி யணியினர் கடன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.	இந்த பதவியணியினர் கடனை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக கிடைக்கின்ற பதிலின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுததல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 21,414,931 நானவித கடன்பட்டோர் மீதி 05 வருடங்களை விஞ்சிய ரூபா 13,660,874 மீதியும் காணப்பட்டதுடன் அந்த மீதி இதுவரை தீர்த்துவைத்திருக் கப்பட்டிருக்கவில்லை.	ஒன்றிணைந்த முகாமைத்துவ சேவையை செயற்பாட்டிற்கு கொண்டுவந்த பின்னர் உரிய தொகை கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.	கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1973 இன் 11 ஆம் இலக்க ஒன்றிணைந்த வீட்டு உரிமைச் சட்டத்தின் 5(2)	கூட்டு ஆதனங்களில் குடியிருப்பதற்காக தரச் சான்றிதழ் மற்றும் பூர்த்திச் சான்றிதழ் பெற வேண்டியிருந்த போதும்	இதில் குறிப்பிடப் பட்ட முறையில் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் உரித்துறுதி கையளிப்பதற்கு	தரச் சான்றிதழ் மற்றும் இறுதிச் சான்றிதழ் வழங்கியதன் பின்னர் கூட்டு

	ஆம் பிரிவு	அவ்வாறு பெற்றிருக்காத 699 உரிமையாளர்கள் குடியிருந்தமையினால் கூட்டிணைப்பதற்கும், உரித்துறுதி கையளிப்பதற்கும் முடியாதிருந்தது. அவ்வாறான பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வீட்டு ஆதன உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அதிகார சபைக்கு செயற்படுவதற்கு முடியாதிருந்தது.	முடியாதிருக்குமாயின் இறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமையால் மாத்திரம் ஆகும். எனினும் அதிகார சபையின் இறுதி சான்றிதழ் பெற்றுக் கொள்வத்றகு அந்த ஆதனங்களுக்காக தரச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே முடியுமாகும். அது தொடர்பாக அபிவிருத்தியாளர் களுக்கு பின்தொடர் நடவடிக்கைகளின் போது அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆதனங்களின் உரிமையார் களுக்கு குடியிருப்பதற்கான அனுமதி வழங்குதல் வேண்டும்.
(ஆ)	2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்த) சட்டத்தின்) 05 ஆம் பந்தியின் (ஏ) பிரிவு	மாளிகாவத்த மற்றும் ஜல்தர வீடுகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமையினால் ஜல்தர வீடமைப்புத் திட்டத்தில் கழிவுப்பொருள் சுத்தி கரிக்கும் முன்மொழிவுத் திட்டத்தின் துணைப் பாகங்கள் அழிவடைந்த மையினால் பிரதேசங்கள் முழுவதும் துர்நாற்றம் ஏற்பட்டமை மற்றும் கழிவு நீர் சுற்றாடலுக்கு விடுவிக் கப்பட்டமையால் பொது நீர் முறைமையில் கலந்ததன் காரணமாக மக்களுக்கு சுகாதார தாக்கங்கள் ஏற்பட முடியுமாக இருந்தது. அவ்வாறே கழிவுப் பொருட்களை அகற்று வதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரமும் பெறப்பட்டி ருக்கவில்லை.	மாளிகாவத்த வீடமைப்புத் திட்டத்தில் பொது நுழைவு வீதி மற்றும் ஏனைய சொத்துக்கள் இன்னும் அபிவிருத்தி செய்யப்படுகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாக காணப்பட் டது. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற வேண்டி யிருக்குமாயின் அந்த கூட்டு ஆதனங்கள் இரண்டினதும் அபிவிருத் தியாளர்களான தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.	அபிவிருத்தி யாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை விரைவாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்க வேண்டியிருந்ததுட ன் மக்களின் சுகாரத்திற்கு பாதகமாக தாக்கமளிக் காத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின்	அதிகார சபையினால் வெற்றிடம் காணப்படுகின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையில் 06	2024 ஆம் ஆண்டின் போது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் அந்தப் பதவிகளுக்குரிய	தாபனவிதிக் கோவையின் பிரகாரம் அத்தியவசிய

	தாபனவிதிக் கோவையின் II அத்தியாயததின் 13.3 ஆம் பிரிவு	பதவிகளுக்காக வருடம் ஒன்றிற்கு மேற்பட்ட காலம் பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்து.	தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரர்கள் இருக்காமையினால் அத் தியவசிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வத்றகு அங்கீகாத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப் பப்பட்டுள்ளமையால் அதுவரை அத்தியவசிய சில பதவிகளுக்காக சேவை தேவையின் அடிப்படையில் நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிற் கடமையில் சில பதவிகள் வழங்கப்பட்டுள்ளது.	பதவிகளுக்காக உத்தியோ கத்தர்களை நிரந்தரமாக நியமித்து அதிகார சபையின் செயலாற்ற லைக் கட்டியெழுப்புவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையி ன் மூலம் அறிமுகப்படுத்த ப்பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி	பொது முயற்சிகளுக்காக அந்தந்த நிறுவனங்களின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய பொருளாதார கொள்கை களுக்கு ஒத்துப்போகும் வகையில் உபாயவழித் திட்டமொன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் வியாபார சூழலில் இடம் பெறுகின்ற மாற்றங்களுக் காக அதிகார சபையால் உபாயவழி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	2025-2029 உபாயவழித் திட்டம் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப் பப்பட்டுள்ளது.	உபாயவழி திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2008 திசம்பர் 31 ஆம் திகதி இலக்கம் 30/2008 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை	அதிகார சபையின் ஊழியர்களுக்கு சாதாரண இடர்கடன் திட்டத்தின் மேலதிகமாக மேலும் விஷேட கடன் தொகை யொன்று ரூபா 30,000 ஆகக் கூடிய அளவின் கீழ் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. சாதாரண இடர்கடன் மீதி மற்றும் இந்த விஷேட இடர்கடன் மீதியொன்றி ணைந்து எடுக்கப்பட்ட	பதிலளிக்கப்படவில்லை.	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மேல திகமாக செலுத்தப்பட்ட வைகளை அறவிடுவதற்கும் எதிர் காலத்தில் உரிய சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்

		அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2008 இல் ஆகக்கூடிய எல்லையை விஞ்சி மேற் கொள்ளப்பட்டிருந்தது.		வேண்டும்.
(ஊ)	2024 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 01/2024 என்ற தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை.	அமைச்சரவை அங்கீகார மின்றி அமைச்சு அல்லது நிறுவன மட்டத்தில் மேற் கொள்ளப்படுகின்ற பல்வேறு படிகளை கைவிடுதல் மற்றும் பல்வேறு நலன்புரி மானியங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக புதிய கடப் பாடுகள் ஏற்படுத்தப்படாதி ருக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் மாதாந்தம் ரூபா 6,500 வீதம் வினைத்திறன் படியொன்று செலுத்துவத்றகு பணிப்பாளர் சபை அங்கீகாரம் மாத்திரம் பெற்று மீளாய்வாண்டின் போது ரூபா 4,673,100 செலுத்தப்பட்டிருந்தது.	அதிகார சபையின் ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கை 137 ஆக இருந்த போதும் உள்ள படியான ஊழியர் எண்ணிக்கையும் 89 மாத்திரம் ஆனமையால் ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உச்ச அளவில் சேவையினைப் பெற்றுக்கொள்ளப்பட்ட மையால் அதிகார சபையின் ஒட்டுமொத்த ஊழியர் கோரிக்கையின் அடிப்படையாயக் கொண்டு வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு ஊழியர்களின் வருகையை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறன் படியாக ரூபா 6,500 படி செலுத்தப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேணடியிருந்ததுட ன் அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவு களை அறவிடுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டி செயற்பாட்டு விளைவுகள் ரூபா 85,051,178 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 154,849,367 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 69,798,189 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு செயற்பாடல்லாத வருமானம் ரூபா 76,599,246 இனால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 20,475,338 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

(அ) 2024 ஆம் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 22,711,658 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாடல்லாத வருமானம் ரூபா 76,599,246 இனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2024 ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினம் முறையே ரூபா 16,481,129 இனாலும் மற்றும் ரூபா 5,079,919 இனாலும் அதிகரித்திருந்தது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 0.6:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அது 1.2:1 ஆகும். அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் திரவத்தன்மை கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற 55 முறைப்பாடுகள் 2024 திசம்பர் 31 வரையில் தீர்த்துவைக்கப்படாதிருந்த துடன் அதில் 04 முறைப்பாடுகள் கிடைத்து 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமும், 15 முறைப்பாடுகள் கிடைத்து 03-07 வருடங்களுக்கிடையிலான காலமும், 22 முறைப்பாடுகள் கிடைத்து 01-03 வருடங்களுக்கிடையிலான காலமும் கடந்திருந்தது. இந்த முறைப் பாடுகளுக்கிடையே அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக அந்த முறைப்பாடுகள் 20, நீர்க்கசிவு தொடர்பான முறைப்பாடுகள் 10 மற்றும் ஆதவரைபடம் பதிவு செய்யப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் 14 அடங்கியிருந்தது.	ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு சட்டத்தினதும் மற்றும் பொதுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு சரியாக தேவையான சான்றுகள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை கள் எடுக்கப்படுவதுடன் அதன் அடிப்படையில் சரியான தீர்மான மொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் உரிய பிரகாரம் விடயங்களைக் கண்டறி வதற்கும் எதிர்ப்பினைக் கவனத்திற்கொள்வதற்கும் காலம் எடுத்திருந்தது.	முறைப்பாடுகள விசாரணை செய்வதற்கு விரைவாக வேலைத்திட்ட மொன்று அமுல் படுத்துதல் வேண்டும்.
(ஆ)	கூட்டுஆதன வரைபடத்தைப் பதிவு செய்யாதிருந்த அரசாங்கத்துறையின தும் தனியார் துறையினதும் 09 அபிவித்தியாளர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தி சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அதில் 03 பேர்கள் மாத்திரம் அதாவது 33 சதவீதம் மாத்திரம் நிறைவேற்ற முடியுமாக இருந்தது.	கூட்டுஆதன வரைபடம் பதிவு செய்யாத ஆதனங்களுக்கு பரிசோதனைகள் நடாத்துவதாயின் அதில் கூட்டுஆதன வரைபடம் பதிவு செய்வதற்கு ஆதனங்கள் அபிவிருத்தியாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காகும். அதன் பின்னர் கூட்டுஆதன வரைபடம் பதிவு செய்வதற்காக ஆர்வம் காட்டாதிருப்பார்களாயின் அந்த ஆதனங்கள் தொடர்பாகவும் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்கான விடயங்களைக் கண்டறிவதற்கு காலம் எடுத்திருந்தது.	இலக்கிடப்பட்ட பிரகாரம் விசாரணைகளை நடாத்தி சட்ட ரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கூட்டுஆதன வரைபடம் பதிவு செய்த திகதியில் இருந்து 03	கூட்டுஆதன வரைபடம் பதிவு செய்த திகதியில் இருந்து 03	இலக்கிடப்பட்ட பிரகாரம்

	மாதங்களுக்குள் முகாமைத்துவ கூட்டமைப்பை ஸ்தாபிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் அரச துறையின் முகாமைத்துவ கூட்டிணைப்புக்கள் 04 மற்றும் தனியார் துறையின் முகாமைத்துவ கடமைப்புக்கள் 35 ஸ்தாபிப்பதற்கு இழக்கிடப்படடிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போது அரச துறையில் ஒரு முகாமைத்துவ கூட்டமைப்பேனும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் தனியார் துறையில் 03 கூட்டமைப்புக்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதன் செயல் முன்னேற்றம் 09 சதவீதம் ஆகும்.	மாதங்களுக்குள் முகாமைத்துவ கூட்டமைப்பு முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் நடாத்துவதாயின் அபிவிருத்தியாளர்களோ அல்லது உரிய தரப்பினர் களால் வீட்டு உரிமையா ளர்களுக்கு உரித்துறுதி கள் விநியோகித்தல் வேண்டும். உரிய ஆதனங்கள் அபிவிருத்தி யாளர்களால் உரித்துறுதி விநியோகிப்பதற்கான தாமதம் ஏற்படுவதற்கு பல்வேறு விடயங்கள் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.	முகாமைத்துவ கூட்டமைப்பை ஸ்பித்து உரிய பணிகளை நிறை வேற்றுவதற்கு அதிகார சபையால் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சான்றிதழ் பத்திரம் ம்றறும் ஆரம்ப விடுவித்தல் கடிதம் புதுப்பித்தல் தொடர்பான ஆரம்ப விடுவித்தல் கோவைகள் 13, தற்காலிக கூட்டு ஆதனக்கோவைகள் 72 மற்றும் அரை வாசி கூட்டு ஆதனக் கோவைகள் 35 புதுப்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போது புதிதாக 14 மாத்திரம் அதாவது 12 சதவீத இலக்கின் அளவு மாத்திரம் அடையப்பட்டிருந்தது.	இதில் குறிப்பிடப்பட்ட அரை மற்றும் தற்காலிக ஆதனங்களுக்காக அபிவிருத்தியாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்களால் புதுப்பிப் பதற்காக கோரப்பட வில்லை.	இலக்கினை இயலுமான வரை சரியாகவும் பொருத்தமானதாக வும் திட்டமிட்டுக் கொள்வதற்கும், அதிகார சபை செயலாற்றலை கட்டியெழுப்புவதற் கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	தற்காலிக தேவையின் அடிப்படையில் வருடத்தில் புதிய 03 பிரமாணங்களைத் தயாரித்தல், வரைவு செய்தல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் எதிர்பார்க் கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு புதிய பிரமாணமும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் சட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற முன் மொழிவுகள் யாவும் தனித் தனியாக பெற வேண்டி யிருந்ததுடன் அவை தெரிவு செய்யப்பட்டு மெய்மை ஆய்வு சபையின் மூலம் விடயங்கள் பகுப்பாய்வு செய்து இணக்க விடயங் கள் எத்திகதியென கண்டறிதல் வேண்டும். அதன் பின்னர் அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்காக உரிய காலம் எடுப்பதைத் தடுக்க முடியாதிருந்தது.	பிரமாணங்களை அமுல்படுத்துவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபையால் சான்றிதழ் பத்திரப் பிரிவில் ஆவணங்களை டிஜிட்டல் மயப்படுத்து வதற்கான ஆவணங்கள்	சான்றிதழ் பத்திரப் பிரிவில் 2005-2023 வரையான ஆவணங்களை தரவேற்றம் செய்து கட்டங்கட்டமாக ஆவணங்களை	தரவேற்றத்தை விரைவாக மேற் கொண்டு உரிய முறைமையை

	முகாத்துவ முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு ரூபா 5.9 மில்லியன் தொகை நடப்பாண் டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமையைப் பிரயோக ரீதியில் பயன்படுத்தக்கூடிய வகையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ முறையில் ஸதாபிக்கப்பட்டுள்ளது. 2025.05.22 ஆந் திகதி வரையில் 205,889 ஆவணங்கள் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.	பிரயோக ரீதியில் அதிகார சபையில் பயன்படுத்துதல் வேண்டும்.

3.2 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அதிகார சபையால் 17 வருட காலம் முழுவதும் நிரந்தரப் பதவியணியினர் நியமிக்காமல் சட்ட ஆலோசகர் மற்றும் பரிசோதனை உத்தியோகத்தர் என்ற பெயரில் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 2,242,818 மற்றும் வெளித் தரப்பினருக்கு சட்டக் கட்டணமாக ரூபா 916,500 செலுத்தப் பட்டிருந்தது.	2024 சனவரி 21 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. அங்கீகரம் கிடைத்த ஒரு வெற்றிடத்திற்காக நிரப்புவதற்காக மாத்திரம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. ஆகக் குறைந்த தகைமையுடன் பயிற்சி சட்டத்தரணி ஒருவர் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை சட்டப்பிரிவில் தலைவராக ஆட்சேர்த்தல் பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டமையினால் பதவிக்காக நியமிக்க முடியாதிருந்ததாக அதிகார சபையின் நியமன அதிகாரியால் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுத்தமையால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததால் சட்ட ஆலோசகர் சேவை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட பதவி யொன்று இல்லாமல் அதிகாரம் பெற்ற நில அளவையாளராக 2021 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை நீடிக்கப்பட்டு கடமை தேவையின் பிரகாரம் பதிற்கடமை அடிப்படையில் உத்தி யோகத்தர் ஒருவர் சேர்க்கப் பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 603,300 செலுத்தப்பட்டி ருந்தது.	அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர் பதவி ஒன்று எமது அதிகார சபையில் காணப்படாதிருந்ததுடன் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகளின் போது கட்டிடத்திட்டம் மற்றும் கூட்டு ஆதன வரைபடங்களை இணக்கம் செய்து ஒன்றுக் கொன்று பகுப்பாய்வு செய்வதற்காக தொழில் ரீதியான இயலுமை உள்ள அதகாரம் பெற்ற நில அளவையாளர் தேவையாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட் டது, மேலும் எமது அதிகார சபையின் ஆட்சேர்த்தல் நடை முறையில் திருத்தங்கள் எதிர் காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் போது உரிய பதவியை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை விரவாக மேற் கொள்ளல் வேண்டும்.

(இ)	அதிகார சபையின் அங்கீகரிக் கப்பட்ட பதவியணியில் 137 பேர் ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போது உள்ளபடியான பதிவுகளின் எண்ணிக்கை 89 ஆகும். அதன் பிரகாரம் உரிய பதவிகள் தற்போது தேவைகளுக்கு இணங்க நாளதுவரையாக்கல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 48 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டது. அதில் 08 பதவிகள் ஓர் உயர் முகாமைத்துவ நிலைக்குரிய பதவிகள் ஆகும்.	அத்தியவசிய பதவிகளுக்காக ஆட்சேர்த்தலை மேற்கொள்வ தற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. தேவைகளுக்கு இணங்க எதிர் காலத்தில் அதிகார சபையின் ஆட்சேர்த்தல் நடைமுறையில் திருத்தங்களை மேற்கொள்வ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை விரவாக மேற் கொள்ளல் வேண்டும்.